

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர் தலைமையில் திண்டிவனத்தில் நடைபெற்றது.கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை ஆற்றினார். உடன் தலைமை கழக பிரதிநிதிகள் புதுவை மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுவை சிவா , மாநில மாணவரணி செயலாளர் ஜெ .வீரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்டப் பொருளாளர் ரமணன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், தயாளன், பழனி, ரவிச்சந்திரன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### தலைமைக் கழகப் பிரதிநிதிகள் புதுவை சிவா, ஜெ.வீரமணி பங்கேற்பு!

# திண்டிவனம் தொகுதி தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழக செயலாளர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

*செஞ்சி, செப். 17 -*

*25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒரு ஒன்றிய கழகம் அமைக்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டம்திண்டிவனம் தொகுதி தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது கூட்டத்தில் தலைமைக் கழக பிரதிநிதிகள் புதுவை மாநில தி.மு.க. அமைப்பாளர் புதுவை சிவா, மாநில மாணவரணி செயலாளர் ஜெ .வீரமணி,விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.*

*விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதிக்கான தி.மு.க. செயற்குழு கூட்டம் திண்டிவனம் ஹோட்டல் ஆர்யாஸ் அருகில் உள்ள சங்கமித்ரா திருமண மண்டபத்தில்நடைபெற்றது.*

*கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர் தலைமை தாங்கினார்.*

*திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.*

*கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் ,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ஆகஸ்ட் 22 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கழக செயற்குழு கூட்டத்தில்கழக மறுசீரமைப்பு பணிகள் குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும்கழக ஆக்கப் பணிகள் குறித்து சிறப்புரை ஆற்றினார். தலைமைக் கழக பிரதிநிதிகள் புதுவை மாநில திமுக அமைப்பாளர் புதுவை சிவா, மாநில மாணவரணி செயலாளர் ஜெ. வீரமணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றினர்.*

*கூட்டத்தில் தலைமை கழகம் அறிவித்த கட்சி நிர்வாக சீரமைப்பு தீர்மானங்களை செயல்படுத்தும்வகையில் ஒன்றியத்திற்கு அதிகபட்சமாக .30 ஆயிரம்வாக்காளர்கள் முதல் குறைந்தபட்சமாக 25 ஆயிரம்வாக்காளர்கள் எண்ணிக்கையில் ஒன்றியங்கள் அமைப்பதற்கும், 200 வாக்காளர்களுக்கு ஒரு கிளைக் கழகம் அமைப்பதற்கு தலைமைக் கழகம் அனுமதிக்க வேண்டும்,*

*வருகிற 15ம் தேதி அண்ணா பிறந்தநாள் விழா, 17ஆம் தேதி தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவிவை சிறப்பாக கொண்டாடுவது , 15ஆம் தேதி சென்னை அண்ணா அறிவாலத்தில் நடைபெறும் தி.மு.க. கழக முப்பெரும் விழாவில் நிர்வாகிகள் திரளாக பங்கேற்பது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.*

*கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர் சீனி சின்னராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், பாலகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம் , தயாளன் ,பழனி ,ரவிச்சந்திரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கோபிநாத்,*

*வர்தகரணி அமைப்பாளர் விஜய ராகவன், ஆதி திராவிடர் நல அணி அமைப்பாளர் திருமலை, தொழிலாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமார், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சிவகாமி, மீனவரணி அமைப்பாளர் தங்கராஜ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.கே .பி . ரமேஷ் ,எம். டி.பாபு , உதயகுமார், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன் ,நகர அவைத் தலைவர் ரவிச்சந்திரன், பொருளாளர் ராஜேந்திரன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொருளாளர் வழக்கறிஞர் ரமணன் நன்றி கூறினார்.*

# ஐயா! நின் நினைவிடத்தில் சூளுரைப்போம்!



ஈரோட்டு நாயகனே! தமிழர் தங்கள்
இனமானச் சூரியனே! எட்டுத் திக்கும்
மார்தட்டிச் சுழன்றுவந்தாய்! மனித னுக்கு
மானமும் அறிவும்தான் அழகே என்றாய்!
கூர்மிக்கச் சிந்தனையால் குரல்கொ டுத்தாய்!
கொட்டாவித் துயில்கலைத்தாய்! எழுச்சி தந்தாய்!
போராடி உரிமைகளைப் பெற்றுத் தந்தாய்!
பொதுப்பணிக்கே கொடைதந்தாய் உனது வாழ்வை!

பாடிவைத்த பழமைகளைச் சாடி வைத்தாய்!
பாமரர்க்கும் பகுத்தறிவை விதைத்தாய்! மூடக்
காடெரித்த யுகக்கனலே! ஐயா, உன்றன்
கைத்தடியின் வளைவிலும்கம் பீரம் உண்டே!
தாடிவைத்த குழந்தைநீ சிரிக்கும் போதில்
தலைமுதல்பா தம்வரைக்கும் மகிழ்ச்சி பொங்கும்!
ஏடெடுத்தே நீ,கணைகள் தொடுக்கும் போதில்
எதிரிகளின் அடித்தளமே நொறுங்கிப் போகும்!

மூன்றுவிழுக் காடுள்ள ஒருகூட் டத்தின்
மூவாயி ரம்வருட ஆதிக் கத்தைச்
சான்றுசொல்லி உலகுக்கே எடுத்து ரைத்தாய்!
சனாதனத்தின் கொடுமைகளைத் தோலு ரித்தாய்!
ஆன்றோராய் சான்றோராய் கல்வி பெற்றே
அடித்தட்டு மக்களையும் உயரச் செய்தாய்!
தோன்றின்நற் புகழோடு தோன்றி வந்தாய்!
தொண்டுசெய்து பழுத்தபழம் ஆகி நின்றாய்!

அலைவைத்த கடலைப்போல் இயங்கி வந்தாய்!
ஆயிரமா? அதற்கதிகம் பிறைகள் கண்டாய்!
வலைவைத்துப் பார்த்தார்கள், அறுத்தெ றிந்து
வலம்வந்தாய் நாடெங்கும்! கொண்டு வந்து,உன்
தலைவைக்க வேண்டும்என்ற நரிக்கூட் டத்தைத்
தரைமட்டம் செய்தாய்! நம் கலைஞ ருக்குச்
சிலைவைத்துப் பேரன்பைப் பொழிந்தாய்! என்றும்
சிதையாத புகழுக்கே புகழ்கொ டுத்தாய்!

தடியெடுத்து நீஅன்று நடந்த தால்தான்
தமிழர்க்கே அறிஞர்அண்ணா கிடைத்தார்! உன்றன்
குடியரசின் உலைக்கூடத் தகிப்பி லேதான்
“ குவளைப்பூ” போர்க்கருவி ஆன தென்பேன்!
திடலுக்குள் மட்டும்நீ இல்லை! கண்ணீர்த்
திவலைகளைத் துடைத்தெறிந்து சொல்வேன், எங்கள்
உடலுக்குள் உயிரணுக்க ளெல்லாம் உள்ளாய்!
உனைவிட்டுத் தமிழர்க்கு வரலா றேது?

அரியார்க்கும் அரியாராய் பிறந்து வந்தாய்!
அடுத்தடுத்துச் சாதனைகள் புரிந்து வந்தாய்!
வரலாற்றில் “ஈழவர்”தம் உரிமை வென்றாய்!
“வைக்கம்போர் நூற்றாண்டின்” புகழில் நின்றாய்!
பெரியார்க்கும் பெரியார்நீ! அதனா லன்றோ
பெண்ணுரிமை முன்னுரிமை காணச் செய்து
சரியான பாதைக்கே அழைத்து வந்தாய்!
சமத்துவம் சமதர்மம் தழைக்கச் செய்தாய்!

பட்டாலும் தொட்டாலும் தீட்டு! கண்ணில்
பார்த்தாலும் தீட்டென்றார்! அவரை யெல்லாம்
விட்டாயா? அதிரடியால் விரட்டி வைத்தாய்!
விடுதலையால், குடியரசரால் விடியல் தந்தாய்!
அட்டையைப்போல் உறிஞ்சும்அந்தக் கூட்டம்,
இன்றோ
“அம்பேத்கர்” பெயர்கூட தீட்டென் கின்றார்!
எட்டிஉதைப் போம்அந்த ஆண வத்தை!
ஈரோட்டு நெருப்பில்அதைப் பொசுக்கி ப்போம்!

வியாபாரக் குடும்பத்தில் பிறந்தாய்! உன்னை
விலைபேச எவராலும் முடிய வில்லை!
நியாயத்தின் வடிவம்நீ, அதனால் உன்னை
நீதிமன்றப் பொய்வலைகள் நெருங்க வில்லை!
தியாகம்நீ செய்யவில்லை! தியாகம் உன்னைச்
செய்தது!நீ தரைவாழ்ந்த உலக வாழ்க்கை
மயானத்தின் முடிவல்ல! காலத் தாலும்
மடியாத சரித்திரத்தின் புதுத்தொ டக்கம்!

நீண்டநெடுந் தொலைநோக்கில் உனது கொள்கை
நீட்சிகண்டு சமத்துவத்தின் மாட்சி கண்டு
தாண்டிமிகக் குதிக்கிற து பகைவர் கூட்டம்!
தலைதூக்கி “மனுதர்மம்” போடும் ஆட்டம்!
மீண்டும்உன்றன் “கைத்தடிக்கு” வேலை வந்து
விட்டதையா! சனாதனத்தை விரட்டு தற்கே
மூண்டெழுவோம் ஐயா! உன் பிறந்த நாளில்
“முறியடிப்போம் சதியை!”எனச் சூளு ரைப்போம்!

**கவிச்சுடர்**
**கவிதைப் பித்தன்**



### மின்வெட்டால் மக்கள் தவிப்பு: மின்துறை செயல்பாடற்றுக்கிடக்கிறது!

# மின்வெட்டை புகார் செய்யும் மின்னகத்துக்கே மின்வெட்டு!

### மின்துறையை தனியார் மயமாக்க த.வெ.க. அரசு முயற்சி!

சென்னை, செப்.17 –

தமிழகத்தில் மினசார விநியோகம் சீராக இருப்பதாக மின்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், சென்னையின் பல்வேறு பகுதிகளில் இரவு நேரங்களிலும் பல மணி நேரம் மின்வெட்டு ஏற்படுவது, மின்மாற்றி மற்றும் கேபிள் பழுதுகளால் மக்கள் பாதிக்கப்படுவது, மின் தடையை புகார் செய்ய வேண்டிய மின்னகம் சேவை மையத்துக்கே மின்தடை ஏற்படுவது என மின்துறை செயல்பாடுகள் மீது தொடர்ந்து புகார்கள் எழுந்துள்ளன. இதனால் குழந்தைகள், முதியவர்கள், நோயாளிகள், பொது மக்கள் மட்டுமின்றி சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களும் பாதிக்கப்பட்டு வருவதாக கூறப்படு கிறது.

இதற்கிடையே, மின் துறையில் போதுமான பணியாளர்களை நியமித்து பராமரிப்பு பணிகளை வலுப்படுத்துவதற்கு பதிலாக, மின் உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம் உள்ளிட்ட பணிகளில் தனியார் பங்களிப்பை அதிகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

மின்தடை, குறைந்த மின்ன முத்தம், மின் கட்டணப் பிரச்சினை உள்ளிட்ட புகார்களை தெரிவிக்க பொது மக்கள் பயன்படுத்தும் 94987 94987 என்ற மின்னகம் எண்ணுக்கு தினமும் சுமார் 3,000 அழைப்புகள் வருவதாக கூறப்படுகிறது. ஆனால், மின்தடை ஏற்பட்ட நேரத்திலேயே மின்னகம் அழைப்பு மையத்தையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை ஏற்படுவதாக புகார்கள் எழுந்துள்ளன. மின்னகம் அழைப்பு மையத்திற்கு வழங்கப்பட்டுள்ள மின் காப்பு வசதி சுமார் 10 நிமிடங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மின்னகம் அழைப்பு மையத்துக்கு மயிலாப்பூர் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தில் இருந்து மினசாரம் வழங்கப்படுகிறது. அந்த துணை மின் நிலையத்தில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டு, 10 நிமிடங்களுக்குள் மின்சாரம் சீராகவில்லை என்றால், மின்னகம் அழைப்பு மையமும் செயல்பட முடியாத நிலை ஏற்படுவதாக கூறப்படுகிறது. மினவெட் டால் பாதிக்கப்பட்ட மக்கள் புகார் தெரிவிக்க வேண்டிய நேரத்திலேயே, அந்த புகாரை பெற வேண்டிய மின்னகம் மையமும் மின்சாரம் இல்லாமல் முடங்குவது, மின்துறையின் மின் காப்பு மற்றும் அவசரகால ஏற்பாடுகள் குறித்து கேள்வியை எழுப்பியுள்ளது.

களப்பணியில் உள்ள மின் அதிகாரிகளின் செல்போன் எண்கள் மாற்றப்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையில், புதிய எண்கள் குறித்து பொதுமக்களிடம் போதிய அளவில் தகவல் தெரிவிக்கப்படவில்லை என்ற புகாரும் உள்ளது. இதனால் பழைய எண்களில் தொடர்பு கொள்ளும் மக்கள் பதில் கிடைக்காமல் தவிக்கின்றனர். சில பகுதிகளில் ‘ஃபியூஸ் ஆஃப்’ புகார் எண்களும் தொடர்பு கொள்ள முடியாத நிலை இருப்பதாக கூறப்படுவதால், பொது மக்கள் மின்னகம் எண்ணையே நம்ப வேண்டிய நிலை உள்ளது. ஆனால், அதுவும் மின்தடையால் முடங்கினால் புகார் தெரிவிக்கக்கூட முடியாதநிலை ஏற்படுகிறது.

சென்னையின் பல்வேறு பகுதிகளில் இரவு நேரங்களிலும் அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற்படுவதாக பொதுமக்கள் தொடர்ந்து புகார் தெரிவித்து வருகின்றனர். சென்னை அமைந்தகரை பகுதியில் 8 மணி நேரத்திற்கும் மேலாக மின்சாரம் இல்லாமல் மக்கள் பாதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மின் விசிறி உள்ளிட்ட அத்தியாவசிய சாதனங்கள் இயங்காததால் குழந்தைகள், முதியவர்கள் உள்ளிட்டோர் இரவு நேரத்தில் கடும் சிரமத்திற்கு ஆளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புளியந்தோப்பு, பாலவாக்கம் உள்ளிட்ட பகுதிகளிலும் சுமார் 3 மணி நேரம் வரை மின்தடை ஏற்பட்டதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். நிலத்தடி கேபிள் கோளாறு உள்ளிட்ட காரணங்களால் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

ஒருபுறம் மின் விநியோகம் சீராகி விட்டதாக மின்துறை தரப்பில் தெரிவிக்கப்படும் நிலையில், மறுபுறம் பல பகுதிகளில் மின்தடை தொடர்வது பொதுமக்களிடையே கேள்வியை எழுப்பியுள்ளது. மின்தடை ஏற்படும் பல்வேறு சம்பவங்களில் மின்மாற்றி பழுது, நிலத்தடி கேபிள் கோளாறு, மின் சாதனங்களில் தொழில்நுட்பக் கோளாறு போன்றவை காரணங்களாக தெரிவிக்கப்படுகின்றன.

மின்மாற்றிகளில் தீப்பற்றுதல் அல்லது முக்கிய மின் சாதனங்களில் பழுது ஏற்பட்டால், மின்சாரத்தை மீண்டும் வழங்குவதற்கு நீண்ட நேரம் ஆகிறது. இதனால் மின்மாற்றிகள், துணை மின் நிலையங்கள், கேபிள்கள் உள்ளிட்ட மின் கட்டமைப்புகளில் வழக்கமான பராமரிப்புப் பணிகள் போதுமான அளவில் மேற்கொள்ளப்படுகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஒவ்வொரு மின்மாற்றி தீ விபத்துக்கும் பராமரிப்பின்மையே காரணம் என்று கூற முடியாது என்றாலும், தொடர்ந்து ஏற்படும் பழுதுகளை கருத்தில் கொண்டு மின் கட்டமைப்புகளை முன்கூட்டியே ஆய்வு செய்து பராமரிக்க வேண்டும் என்பதே பொது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

மின்தடை வீடுகளை மட்டுமின்றி சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களையும் பாதிக்கிறது. திடீர் மின்தடையால் இயந்திரங்கள் நிறுத்தப்படுவதுடன், மீண்டும் மின்சாரம் வந்த பிறகு உற்பத்தியை தொடங்குவதற்கு கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் உற்பத்தி இழப்பு ஏற்படுவதுடன், மாற்று மின்சார வசதிகளை பயன்படுத்த வேண்டிய தொழில் நிறுவனங்களுக்கு கூடுதல் செலவும் ஏற்படுகிறது. மின்சார விநியோகம் சீராக இல்லாவிட்டால் தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு, உற்பத்தி என பல துறைகளிலும் பாதிப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாக சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர்.

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு பொதுச் செயலாளர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளதாவது:

மின்சாரம் என்பது மக்களின் அடிப்படைத் தேவை. மின்வெட்டால் மக்கள் பாதிக்கப்படும் நிலையில், புகார் தெரிவிக்கும் மின்னகத்துக்கே போதுமான மின்காப்பு வசதி இல்லாதது ஏற்றுக்கொள்ள முடியாது. மின் உற்பத்தி முதல் விநியோகம் வரை பொதுத் துறையை வலுப்படுத்துவதற்கு பதிலாக தனியார் பங்களிப்பை அதிகரிப்பது தீர்வாகாது. புதிய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் துணை மின் நிலையங்களை பொதுத்துறை மூலம் அமைக்க வேண்டும். மின் மாற்றி, கேபிள் உள்ளிட்ட மின் கட்டமைப்புகளை முறையாக பராமரிக்க போதுமான ஊழியர்களை நியமிக்க வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும். மின்துறையை தனியார் மயமாக்கும் முயற்சிகளை கைவிட வேண்டும் என்றார்.

எனவே, இரவு நேர மின்வெட்டை கட்டுப்படுத்தி தடையற்ற மின்சாரம் வழங்குதல், மின்மாற்றி மற்றும் மின் கட்டமைப்புகளை முறையாக பராமரித்தல், மின்னகத்திற்கு போதுமான மின் காப்பு வசதி ஏற்படுத்துதல், போதுமான மின் ஊழியர்களை நியமித்தல், ஒப்பந்த தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மின்துறையை தனியார் மயமாக்கும் முயற்சிகளை கைவிட்டு பொதுத் துறை மின்வாரியத்தை வலுப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்பதே பொதுமக்கள் மற்றும் மின் ஊழியர்களின் கோரிக்கையாக உள்ளது.